பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 06 திங்கட்கிழமை 22.08.2022 கதிர் 178

## 'கியூ.ஆர்' முறையால் வடக்கில் பெற்றோல் கொள்வனவு மந்தம்

நாள் ஒன்றுக்கு 25 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் விநியோகிக்கக் கூடிய இயலுமை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உள்ளபோதும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கொள்வனவு செய்வதற்கு பின்னடிக்கின்றன என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்தியக் கிளையினர் தெரிவித்தனர். ☞2

# வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்

## 90 நாள்களுக்குத் தடுத்துவைத்து விசாரிக்க அனுமதித்தார் ரணில்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, செயற்பாட்டாளர் ஹந்த ஜீவந்த குணதிலக்க மற்றும் வண. கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 90 நாள்களுக்குத் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியுள்ளார். ☞2



## தமிழக மீனவர்கள் 10 பேர் இன்று கைது

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 10 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் - தூத்துக்குடியில் இருந்து வந்த மீனவர்களே முல்லைத்தீவுக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை இன்று பகல் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 10 மீனவர்களையும் அவர்கள் பயணித்த விசைப் ☞2

## A/L பரீட்சைப் பெறுபேறு மாத இறுதியில் வெளியீடு

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் 30 அல்லது 31ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இந்தத் தகவலை பரீட்சைகள் ஆணையாளர் இன்று தெரிவித்துள்ளார்.

## போதை மாத்திரைகளுடன் மாட்டிய பசறை இளைஞர்!

பசறை இளைஞர் ஒருவர் போதை மாத்திரைகளுடனும் 800 மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பசறை, வன்வே பகுதியில் 28 வயதுடைய குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பசறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் ☞2

## தமிழ்த் தலைவர்களுக்கு ரணில் மீண்டும் அழைப்பு



இலங்கையை மீட்டெடுக்கத் தமிழ்த் தலைவர்களும் கைகோர்க்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அநுராதபுரம் கோல்டன் மெங்கோ மண்டபத்தில் நடைபெற்ற அநுராதபுரம் மாவட்ட அபிவிருத்தி சபையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞2

## ரூபவாஹினிக்குள் அத்துமீறல்: இரண்டாவது சந்தேகநபர் கைது




தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்து, அதன் ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டுக்குள்ளான இரண்டாவது சந்தேகநபரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சமூகச் செயற்பாட்டாளரான சமிந்த கெலும்பிரிய அமரசிங்க (வயது 45) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இன்று கறுவாத்தோட்டம் பொலிஸ் நிலையத்துக்கு வந்து சரணடைந்த நிலையில் அவர் ☞2

# 22 ஆவது திருத்தத்துக்கு எதிரான ஒன்பது மனுக்களும் விசாரணை

## உயர்நீதிமன்றம் இன்று தீர்மானம்



அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தைச் சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட 9 மனுக்கள் மீதான விசாரணைகளை முன்னெடுக்க உயர்நீதிமன்றம் இன்று தீர்மானித்துள்ளது.

22 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் சில சரத்துகள், அரசமைப்புக்கு முரணானது என உத்தரவிடுமாறு கோரி, குறித்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு, கலாநிதி குணதாஸ அமரசேகர உள்ளிட்ட 9 பேரால் குறித்த மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மனுக்களின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார். 22 ஆவது திருத்தச் சட்டமூலம், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவால் நாடாளுமன்றத்தில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டது.

## சோசலிச மாணவர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் கைது!



அரசுக்கு எதிரான போராட்டச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான சோசலிச மாணவர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ரங்கன லக்மால் தேவப்பிரிய கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இன்று காலை கொழும்பு - ☞2

## மண்ணெண்ணெய் விலை உயர்வுக்கு மக்கள் எதிர்ப்பு

### மீன்களின் விலைகளும் அதிகரிக்கும் நிலை



மண்ணெண்ணெய்யின் விலையை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சடுதியாக அதிகரித்துள்ள நிலையில், அதற்கு மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். ☞2

## இன்றும் எட்டுப் பேர் தமிழகத்தில் தஞ்சம்



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து மேலும் 8 பேர் கடல் வழியாகத் தமிழகம் சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த 3 ஆண்கள், 2 பெண்கள் மற்றும் 3 சிறுவர்கள் என மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரே படகு ஒன்றில் தனுஷ்கோடியைச் சென்றடைந்து தஞ்சம் கோரியுள்ளனர்.

அவர்களை மீட்ட தமிழகக் கடலோரப் பாதுகாப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, நேற்றும் 8 பேர் கடல் வழியாகத் தமிழகம் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவர் பிரதிநிதிகளை பயங்கரவாதியாக்காதீர்!

### ரிஷாத் கடும் கண்டனம்



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுவதற்கான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் ☞2

## சகல பல்கலைக்கழகங்களும் செப்டெம்பர் மீண்டும் ஆரம்பம்

நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் மீள ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலை தொடர்பில் ஆராய்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ☞2

## மாணவர் பிரதிநிதிகளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த 30 வருட யுத்தத்தின் போது, யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மாத்திரமன்றி, அப்பாவி தமிழ் இளைஞர்கள் பலரும் இப்பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, எவ்வித விசாரணைகளுமின்றி அநியாயமாக நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

அதேபோன்று, ஈஸ்டர் தாக்குதலின் பிற்பாடு, அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் தலைவர்கள் என முஸ்லிம்களை குறிவைத்து இச்சட்டம் பிரயோகிக்கப்பட்டது.

தற்போது, நாட்டினை நாசமாக்கிய ஆட்சியாளருக்கு எதிராக போராடிய சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் மீது இச்சட்டம் பிரயோகிக்கப்படுவதற்கான எத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அப்பாவி தமிழ் இளைஞர்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரயோகிக்கப்பட்டபோது, ஏனைய சமூகத்தவர்கள் அதற்கு எதிராகப் போதுமான அளவில் கைகோர்க்க முன்வந்திருக்கவில்லை.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் மீது இந்தச் சட்டம் பிரயோகிக்கப்பட்டபோது, பெரும்பான்மை சமூகத்தவர்கள் போதுமான அளவில் அதற்கு எதிராகக் கைகோர்க்க முன்வந்திருக்கவில்லை. ஆனால், இன்று இந்நிலைமையில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் முதல், பயங்கரவாதத்துக்கு எதிராக அது பயன்படுத்தப்பட்டதை விடவும் அரசியல் உள்நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களே அதிகம் என்பது எல்லோருமே அறிந்த விடயம்.

நான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நாடாளுமன்றத்திலே மிகவும் காத்திரமாக குரல் கொடுத்த ஒருவர் என்பதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். அதேசமயம், அவ்வாறான ஒருவர் இன்று ஜனாதிபதியாக இருக்கின்ற நிலையில், அறவழிப் போராட்டக்காரர்களை அவரது கையொப்பத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எண்ணி மிகவும் வேதனையடைகின்றேன்.

இவ்வாறு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஜனநாயக ரீதியில், அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பிரயோகிக்கின்றபோது, தற்போது நாடு எதிர்கொள்ளும் இக்கட்டான பொருளாதார நிலைமை இன்னும் மோசமடையும் என்பதை அச்சத்தோடு நினைவுகூர விரும்புகின்றேன்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, இச்சட்டம் பயங்கரவாதிகளுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டதை விட அரசியல் தேவைகளுக்காகவே அதிகமாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இப்பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டின் சட்டங்களிலிருந்து ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். அது மாத்திரமின்றி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்டவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டிக்கிறேன் - என்றுள்ளது.

## சகல பல்கலைக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக பல்கலைக் கழகங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூடப்பட்டிருந்தன.

## மண்ணெண்ணெய் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யின் விலை 87 ரூபாவாக இருந்த நிலையில், நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 253 ரூபாவால் விலை அதிகரிப்பு இடம்பெற்றது.

இதன்படி மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் புதிய விலையாக 340 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்புக்கு மீனவர்கள் உட்படப் பல தரப்பினரும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சமையல் எரிவாயுவின் விலை 5 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. எனவே, மண்ணெண்ணெய் அடுப்பு தான் பயன்படுத்தி வந்தோம். தற்போது அதன் விலையும் உச்சம் தொட்டுள்ளது. மின்சாரக் கட்டணமும் அதிகரித்துள்ளதால், என்ன செய்வதென்று தெரியவில்லை என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

மண்ணெண்ணெய் விலை அதிகரித்துள்ளதால், மீன் உள்ளிட்ட கடல் உணவு வகைகளின் விலைகளும் அதிகரிக்கப்படும் என்று வியாபாரத் தரப்பு தெரிவித்துள்ளது.

## சோசலிச மாணவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொம்பனித்தெரு பொலிஸாரால் அவர் கைதுசெய்யப்பட்டார் என்று சோசலிச மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்பின்னர் கொழும்பு - கோட்டை பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரூபவாஹினிக்குள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஜூலை 13 ஆம் திகதி ரூபவாஹினி கலையகத்துக்குள் நுழைந்து, ஒளிபரப்பு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் தனிஸ் அலி என்ற சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டு தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## தமிழ்த் தலைவர்களுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட்டனர். சுதந்திரம் பெற்ற பிறகுதான் பிரிந்தனர். இப்போது நமக்கு முன்னால் ஒரு கடினமான காலம் உள்ளது. நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். சுதந்திரம் பெற இடதுசாரித் தலைவர்கள் ஒன்று சேர்ந்தனர். ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்ற தமிழ்த் தலைவர்களும் இருந்தனர். அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்தனர். நாம் அனைவரும் மீண்டும் இணைந்து செயற்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது - என்றார்.

## போதை மாத்திரை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவலையடுத்து வன்வே பகுதியில் சோதனையை மேற்கொண்டபோது குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பசறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## தமிழக மீனவர்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகுடன் திருகோணமலைத் துறைமுகத்துக்குக் கடற்படையினர் கொண்டு சென்றனர்.

10 மீனவர்களும் விசாரணைகளின் பின்னர் நாளை காலை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## 'கியூ.ஆர்' முறையால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'கியூ.ஆர்' குறியீட்டு முறைமைக்கு அமைவாக எரிபொருள் வழங்கலை மேற்கொள்ளாத 12 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நிறுத்தப்பட்டுள்ளது. அந்த 12 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குள் வடக்கில் எந்தவொரு நிரப்பு நிலையமும் உள்ளடங்கவில்லை .

நாள் ஒன்றுக்கு 25 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான பெற்றோல் விநியோகிக்க முடியுமாக இருக்கின்றபோதும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கொள்வனவில் ஆர்வம் செலுத்தவில்லை.

'கியூ.ஆர்' குறியீட்டுக்கு அமைய விநியோகம் நடைபெறுவதால் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கொள்வனவு செய்த பெற்றோல் தேங்கியுள்ளமையாலேயே இவ்வாறு அவை கொள்வனவில் ஆர்வம் செலுத்தாமைக்குக் காரணம் - என்றும் வட பிராந்தியக் கிளையினர் சுட்டிக்காட்டினர்.

## வசந்த முதலிகே ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரின் வேண்டுகோளுக்கு இணங்க இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 19 பேரில் குறித்த மூவரும் அடங்குவர்.

சந்தேகநபர்களில் 15 பேர் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தால் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். சந்தேகநபர் ஒருவர் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எனினும், வண. கல்வெவ சிறிதம்ம தேரர், ஹந்த ஜீவந்த குணதிலக மற்றும் வசந்த முதலிகே ஆகியோர் பிணையில் விடுவிக்கப்படவில்லை. மாறாக 72 மணிநேர தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், தடுப்பு காவலில் வைக்கும் உத்தரவில் கையெழுத்திட வேண்டாம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மேரி லோலோர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தார்.

ஜனாதிபதி அவ்வாறு கையெழுத்திடுவது இலங்கைக்கு இருண்ட நாளாக அமையும் என்றும் அவர் 'ருவிட்' செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622

இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலையில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண்டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தருவார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்சி, இவை தொடர்பான வேலை அனுபவம் சேரும் போது தான் தொழில் தகைமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஓட்டுனர்கள் ( welders) மற்றும் விருந்தோம்பல் துறை ஊழியர்கள் ( Hospitality workers) உலகின் பல நாடுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய

jananayakam.associates@gmail.com

என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இன்னொரு எதேச்சாதிகாரி

'நெருப்பில்லாமல் புகை வராது' என்பார்கள்.

அதுபோல, 69 லட்சம் வாக்குகளுடன் பெருவெற்றியீட்டி, அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவியில் இருந்து துரத்தியடித்து, எங்கோ அரசியல் அந்தகாரத்தில் இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம், காரணமின்றி முன்னெடுக்கப்பட்டதல்ல; வெறும் வீம்பில் மேற்கொள்ளப்பட்டதுமல்ல.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே குறிப்பிட்டமை போல, இப்போதும் குறிப்பிடுகின்றமை போல, மோசமான பொருளாதார வீழ்ச்சிக்குள் நாடு மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றது. அதன் பெறுபேறாக வெடித்ததே அந்த மக்கள் எழுச்சிப் போராட்டம்.

இந்தப் பொருளாதார வீழ்ச்சி நாட்டின் வரலாற்றில் முன்னெபோதும் இல்லாத மிக மோசமான பாதிப்பு. நாட்டின் ஒவ்வொரு குடிமகனதும் சட்டைப் பையையும் சூறையாடிய இந்த பின்னடைவு தன்பாட்டில் ஏற்பட்டதல்ல.

அந்த மோசமான பாதிப்புக்களின் உண்மைச் சூத்திரதாரிகள் எவருமே கைது செய்யப்படவில்லை. யாரும் அடையாளப்படுத்தப்படக் கூட இல்லை. அது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்க்ரமசிங்கவோ, அவரது நிர்வாகமோ கவனிக்கக் கூடவும் இல்லை. கவனிக்கும் திராணி கூட அத்தரப்புக்கு இருப்பதாக நம்பவும் முடியாது.

நாட்டை கொள்ளையிட்டுப் பொருளாதாரப் பேரவை பேரழிவை ஏற்படுத்தியவர்கள் எவருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க வக்கற்ற ரணிலின் அரசு, அந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு எதிராகப் போராடி, அதிகார மாற்றத்தை ஏற்படுத்த வழி செய்து, இந்த நாடு மூச்சு விடக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தையாவது ஏற்படுத்தித் தந்த மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது என்பது அரசியல் கற்றுக் குட்டித்தனம்தான். நீதி, நேர்மைப் பண்பில்லாத எதேச்சாதிகாரம் என்பதும் தெளிவு.

தன்னுடைய நல்லாட்சி காலத்தில் பிணைமுறி மூலம் பல்லாயிரம் கோடி ரூபாவைச் சூறையாடியவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் நேர்மைத்தனம் இல்லாத ரணிலின் தலைமை –

நாட்டின் பொருளாதாரத்தை அழித்துச் சீர் கெடுத்தவர்கள் என்று கூறப்படும் – பல்லாயிரம் கோடிகளை ஏப்பமிட்ட – ஊழல்வாதிகளை அடையாளம் கண்டு மக்கள் முன்னிறுத்த வக்கற்ற ரணிலின் அரசு –

மக்களிடத்தில் போராட்டத்தை முன்னெடுத்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டார்கள் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஏவி விடத் துடியாய்த் துடிப்பது முழு எதேச்சாதிகாரமின்றி வேறில்லை.

தொழிற்சங்கப் போராட்டங்களும், மக்களின் வெகுஜனப் போராட்டங்களும் அரசமைப்பின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயக உரிமைகள். அவை பயங்கரவாதச் செயல்கள் அல்ல. எந்த அடிப்படையிலும் அவற்றைப் பயங்கரவாதமாக அர்த்தப்படுத்தவோ சித்திரிக்கவோ முடியாது.

நாட்டைச் சீரழித்த அரசியல் ஊழல்வாதிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முதுகெலும்பெற்ற ரணில் விக்கிரமசிங்க, மக்கள் எழுச்சிப் போராட்டக்காரர்கள் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற கொடூர – குரூர – மனிதாபிமானமே அற்ற – சட்டங்களை ஏவி விடுவதன் மூலம் தாமும் முழு எதேச்சாதிகாரிதான் என்பதை உறுதிப்படுத்துகிறார். அவ்வளவுதான்.

# எதிர்காலத்தில் நாட்டு மக்கள் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம் பாயும்!

## இம்தியாஸ் பாகீர் மாக்கார் எச்சரிக்கை



அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கு எதிராக இன்று பயன்படுத்தப்படுகின்ற பயங்கரவாதத் தடைச் சட்டம், நாளை ஏனையோர் மீதும் பிரயோகிக்கப்படக் கூடும்.

இன்று நாட்டில் ஜனநாயகம் வெறும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. ரணில் விக்கிரமசிங்க உண்மையில் ஜனநாயக ரீதியான தலைவர் என்றால் இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு இன்று அவசர காலநிலைமையின் கீழ் நிர்வகிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. சுதந்திரத்தின் பின்னர் சுமார் 4 தசாப்தங்கள் நாட்டில் அவசரகால நிலைமை அமுல்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறிருக்கையில் அண்மையில் அவசரகால நிலைமையை மேலும் நீடிப்பதற்கு எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தொடர்ந்தும் அதனை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்த போது சர்வதேசத்திடம் சென்று பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்றும் , அதில் பாரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்திருந்தார். இன்று அவரே அதனை உபயோகித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரை வேட்டையாடிக் கொண்டிருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்டவற்றிடம் ஜனநாயக ஆட்சி முன்னெடுக்கப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

அவ்வாறு உறுதியளித்த பின்னரே மீண்டும் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை கிடைக்கப் பெற்றது. எனினும் தற்போது அவர் அந்த வாக்குறுதிகளை மறந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். இதற்கு அவர் சர்வதேசத்துக்கு நிச்சயம் பதில் கூற வேண்டும்.

ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்.

அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியத்தினர் மீது பாய்ந்துள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நாளை ஏனையோர் மீதும் பிரயோகிக்கப்படலாம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உண்மையில் ஜனநாயக தலைவர் எனில் இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். – என்றார்.

# ஆடைத்தொழிற்சாலையின் ஊழியர்கள்மீது தாக்குதல்!



பொகவந்தலாவ பகுதியில் இருந்து பலாங்கொடைக்கு தொழில் நிமித்தம் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பலாங்கொடை ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு தொழிலுக்கு சென்று மீள திரும்பியவர்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பொகவந்தலாவ கெம்பியன் பகுதியை சேர்ந்தவர்கள் மீது பலாங்கொடை மாரதென்ன தோட்டப் பகுதியில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் 6 பேர் காயமடைந்துள்ளனர் எனவும், அவர்களில் ஐவர் பலாங்கொடை வைத்தியசாலையிலும், ஒருவர் இரத்தினபுரி வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பின்னவல பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்கள் பயணித்த பஸ் பலாங்கொடை மாரதென்ன தோட்டப் பகுதியில் வைத்து மறித்து சிலர் தாக்குதல் நடத்தியுள்ளர் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள் ளது.

இந்தநிலையில் தாக்குதலுக்கு இலக்கானவர்கள் அருகில் இருந்த வீட்டுக்குள் நுழைந்த நிலையில் வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு சனிக்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.குஇந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பின்னவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசிய எரிபொருள் அனுமதி பத்திர பதிவு 60 லட்சத்தையும் தாண்டியது!

தேசிய எரிபொருள் அனுமதி பத்திரத்திற்கான (கியு.ஆர்) குறியீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு இதுவரை 60 லட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொங்கோவில் மீண்டும் எபோலா பரவல்? தொற்று அறிகுறிகளுடன் பெண் மரணம்!



கின்ஷசா, ஓக.22

கொங்கோ நாட்டின் சுகாதாரத் துறை அதிகாரிகள், கிழக்கு மாகாணமான வடக்கு கிவு பகுதியில் எபோலா வைரஸ் பாதிப்பால் ஒரு பெண் உயிரிழந்தார் எனக் கூறப்பட்டம்சியை அடுத்து, சந்தேகத்திற்குரிய அந்த விடயத்தை விசாரித்து வருகின்றனர் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

கொங்கோ தேசிய உயிரியல் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் (ஐ.என்.ஆர்.பி.), நோயாளிக்கு எபோலா தொற்று உள்ளதா என்பதை கண்டறிய மாதிரிகளைப் பரிசோதிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சந்தேகத்திற்குரிய 46 வயதுடைய பெண், ஓகஸ்ட் 15, 2022 அன்று வடக்கு கிவுவில் அமைந்துள்ள பெனி என்ற நகரத்தில் மரணமானார். அவர் ஆரம்பத்தில் பிற இணை நோய்களுக்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தார். ஆனால் பின்னர், எபோலா வைரஸ் நோயுடன் ஒத்த அறிகுறிகள் அவருக்கு வெளிப்பட்டன.

உலக சுகாதார அமைப்பின் ஆப்பிரிக்காவிற்கான பிராந்திய இயக்குனர் டாக்டர் மாட்ஷிடிசோ மொய்ட்டி பேசுகையில், எபோலா வைரஸ் பகுப்பாய்வு நடந்து கொண்டிருக்கும் போது, நாங்கள் ஏற்கனவே கொங்கோ சுகாதார அதிகாரிகளுக்கு ஆதரவாக உள்ளோம். எபோலா பரவாமல் கட்டுப்படுத்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் என்றார்.

சந்தேகத்திற்குரிய அந்தப் பெண்ணுடன் தொடர்பு கொண்ட எவரையும் அடையாளம் காண சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. கொங்கோவில் முறையான தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நடைமுறையில் இருப்பதை உறுதி செய்ய வேலை செய்து வருவதாகவும் அது தெரிவித்துள்ளது.

உள்ளூர் சமூகங்களிடையே எபோலா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உலக சுகாதார அமைப்பு செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எபோலா வைரஸ் நோய்க்கான வழிகாட்டு நெறிமுறைகளை அது வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

அதில் அஞ்சுவிமாப் அல்லது எபாங்கா மற்றும் இன்மாசெப் ஆகிய இரண்டு உயிர்காக்கும் மருந்துகள் பயன்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ரெம்டெசிவிர் மற்றும் ஸ்மேப் ஆகிய மருந்துகள் எபோலா சிகிச்சைக்கு பயன்படுத்த வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எபோலா என்பது எபோலா வைரஸால் ஏற்படும் ஒரு கடுமையான மற்றும் ஆபத்தான நோயாகும். எனினும் முறையான சிகிச்சை மூலம் உயிரிழப்பு ஏற்படுவதை தடுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.



## மேக விதைப்பு முறையில் சீனாவில் செயற்கை மழை

### கடும் வறட்சியைச் சமாளிக்க

சீனாவில் பெரும்பாலான பகுதிகளில் வறட்சி நிலவுவதால், பயிர்களைக் காக்க செயற்கை மழையை உருவாக்கி, மேக விதைப்பு முறையைக் கையாள சீன அரசு முடிவு செய்துள்ளது.

சீனாவில் 61 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கோடைகாலத்தில் வெப்பநிலை அதிகமாகப் பதிவானது. இதனால் நீர்த்தேக்கங்களில் நீர்மட்டத்தின் அளவு பாதியாகக் குறைந்துவிட்டது. சிச்சுவான் மாகாணத்தில் கடந்த வாரம் வெப்பநிலை 45 டிகிரி செல்சியஸை கடந்ததால், வீடுகளில் குளிர்சாதன இயந்திரங்களின் தேவை அதிகரித்தது. இதன் காரணமாத கடந்த வாரம் மின்சாரத்தை சேமிப்பதற்காக தொழிற்சாலைகள் மூடப்பட்டன. சீனாவின் தென் பகுதியில் அடுத்த 10 நாள்களில் நெற்பயிரில் சேதத்தைக் குறைக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வேளாண் துறை அமைச்சர் தாங் ரெஞ்சியன் தெரிவித்தார் என 'குளோபல் டைம்ஸ்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. அதில், 'சீனாவின் ஆண்டு மொத்த உற்பத்தியில் இலையுதிர் கால அறுவடை 75 சதவீதம் பங்கு வகிப்பதால், எவ்வித சேதமும் ஏற்படாதவாறு அறுவடையை உறுதிப்படுத்த அதிகாரிகள் அவசர நடவடிக்கைகளைக் கையாண்டு வருகின்றனா' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேகத்தில் இரசாயனத்தை தூவி, செயற்கை மழையை உருவாக்கும் மேக விதைப்புத் திட்டத்தை செயல்படுத்த அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர் என வேளாண் அமைச்சக அதிகாரபூர்வ வலைதளப் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், மழை பொழிய வைப்பதற்கான இடம் குறித்து அதில் எந்தத் தகவலும் இடம்பெறவில்லை.

## துருக்கியில் இரு கோர விபத்துகளில் 35பேர் கோரச் சாவு; 60பேர் படுகாயம்





துருக்கி நாட்டில் நேற்று நடந்த இரு வெவ்வேறு சாலை விபத்துகளில் சிக்கி 35 பேர் பலியாகியுள்ளனர். அறுபதுக்கும் கூடுதலானோர் காயமடைந்து உள்ளனர்.

இஸ்தான்புல், துருக்கி நாட்டின் காஜி யன்தெப் மாகாணத்தில் நிஜிப் மற்றும் மாகாண தலைநகர் காஜியன்தெப் பகுதிக்கு இடைப்பட்ட பகுதியில் பயணிகள் பஸ் ஒன்று, அம்புலன்ஸ், தீயணைப்பு வண்டிமற்றும்வாகனம்ஒன்றின்மீதுஅடுத்தடுத்து மோதி விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் 15 பேர் வரை உயி ரி ழந்தனர். 31 பேர் காயமடைந்தனர். அவர்களில் 3 துணை நிலை மருத்துவ மாணவர்கள், 3 தீயணைப்பு வீரர்கள் மற்றும் 2 பத்திரிகையாளர்களும் அடங்குவார்கள். இதேபோன்று இந்த விபத்து நடப்பதற்கு ஒரு சில மணி நேரத்திற்கு முன்பு, மார்தின் மாகாணத்தில் தெரீக் என்ற பகுதியில் பாதசாரிகள் மீது லொறி ஒன்று மோதி விபத்து ஏற்படுத்தி உள்ளது. இந்தச் சம்பவத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் 30 பேர் வரை காயமடைந்தனர். லொறியின் பிரேக் சரியா பிடிக்காததில் கூட்டத்தினர் மீது அது மோதி விபத்து ஏற்பட்டு உள்ளது. 6 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என சுகாதார அமைச்சர் பாரெத்தின் கோக்கா இதுபற்றி டுவிட்டரில் தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி இரு தனிப்பட்ட விசார ணைகள் நடந்து வருகின்றன என நீதி மந்திரி பெகிர் போஜ்டாக் டுவிட்டரில் தெரிவித்து உள்ளார்.

இதனை தொடர்ந்து, உள்துறை அமைச்சர் சுலேமான் சொய்லுவை விபத்து நடந்த சம்பவ பகுதிக்கு அந்நாட்டு அதிபர் டையீப் எர்டோகன் அனுப்பியுள்ளார்.

## சிசுக்களுக்கு விஷ ஊசி செலுத்திக் கொன்ற தாதி

பியூனஸ் அயர்ஸ்,ஓக.22

ஆர்ஜென்டினாவில் பிறந்த குழந்தைகளை வி ஊசி செலுத்தி கொன்ற தாதி கைது செய்யப்பட்டார். ஆர்ஜென்டினா நாட்டின் மத்திய பகுதியில் அமைந்துள்ள கார்டோபா நகரில் மகப்பேற்று மருத்துவமனை ஒன்றில் கடந்த மார்ச் முதல் ஜூன் மாதங்களுக்கு இடையில் ஆரோக்கியமாக பிறந்த 5 குழந்தைகள் பிறந்த சில நாள்களிலேயே இறந்துள்ளன. குழந்தைகளின் மரணம் இயற் கையாக நிகழ்ந்தது என குழந்தைகளின் பெற்றோர் நினைத்ததால் அவர்கள் யாரும் இதுபற்றி பொலிஸில் முறைப்பாடு அளிக்கவில்லை.

ஆனால் கடைசியாக உயிரிழந்த குழந்தையின் பாட்டி கடந்த ஜூன் மாதம் முதல் வாரத்தில் இதுபற்றி பொலிஸில் முறைப்பாடு அளித்தார். அதன்பின்னரே இந்தச் சம்பவம் வெளிச்சத்துக்கு வந்தது. அதை தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் குழந்தைகளின் உடம்பில் பொட்டாசியம் அளவு அதிகமாகி உடல்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டமை தெரியவந்தது. இதுபற்றி விசாரணை தொடர்ந்து வரும் நிலையில் உயிரிழந்த 5 குழந்தைகளில் 2 குழந்தைகளின் மருத்துவ பதிவுகளை மறுஆய்வு செய்ததில் அந்த குழந்தைகள் வி ஊசி செலுத்தி கொல்லப்பட்ட அதிர்ச்சித் தகவல் தெரிய வந்தது. குழந்தைகளுக்கு விம் ஊசி செலுத்திக் கொன்ற தாதி பிரெண்டா அகுவேரோவை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். மற்ற 3 குழந்தைகளின் மருத்துவப் பதிவுகள் மறுஆய்வு நிலுவையில் உள்ளன. அந்தக் குழந்தைகளையும் பிரெண்டா அகுவேரோ விம் வைத்து கொலை செய்திருப்பார் என நம்பப்படுகிறது. எனினும் மருத்துவ பதிவுகளின் மறுஆய்வுக்கு பின்னரே உண்மை தெரியவரும்.

# இந்தியாவுக்குத் தாக்குதல் திறன் கொண்ட ட்ரோன்கள் வழங்க அமெரிக்கா இணக்கம்





புதுடில்லி,ஒக.22

அமெரிக்காவிடம் இருந்து இந்திய இராணுவத்துக்கு முப்பது 'எம்க்யூ9பி பிரிடேடர் ட்ரோன்கள்' வாங்குவது தொடர்பான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியா – சீனா இடையே லடாக் எல்லையில் மோதல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, எல்லைப் பகுதி கண்காணிப்பில் இந்தியிராணுவம் தீவிரம் காட்டி வருகிறது. 'ட்ரோன்' எனப்படும் ஆளில்லா சிறிய ரக விமானங்கள்வாயிலாகஎல்லைககண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கண்காணிப்பு மட்டுமின்றி, தாக்குதலும் நடத்தும் திறன் உடைய, 'எம்க்யூ9பி பிரிடேடர்' என்ற ட்ரோனை அமெரிக்காவிடம் இருந்து வாங்கும் முயற்சியை இந்தியக் கடற்படை மேற்கொண்டது. இராணுவம், விமானப் படை மற்றும் கடற்படைக்கு சேர்த்து மொத்தம் 30 ட்ரோன்களை, 23 ஆயிரத்து 700 கோடி ரூபாவுக்கு (இந்தியப் பணப் பெறுமதியில்) வாங்க திட்டமிடப்பட்டது.

இந்தியாவின் கோரிக்கையை அமெரிக்க இராணுவ உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனமான ஜெனரல் அடாமிக்ஸ் நிராகரித்ததாகக் கூறப்பட்டது. இந்தத் தகவலை அதிகாரிகள் மறுத்து உள்ளனர். "எம்க்யூ9பி பிரிடேடர் ட்ரோன்களை வாங்குவது தொடர்பாக அமெரிக்காவுடன் இந்தியா நடத்தி வரும் பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது,'' என, ஜெனரல் அடாமிக்ஸ் நிறுவன தலைமை செயல் அதிகாரி டாக்டர் விவேக் லல் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானின் காபூலில் அல் – குவைதா தலைவர் அய்மன் அல்ஜவாஹிரியை சமீபத்தில் கொல்ல அமெரிக்கா பயன்படுத்திய, 'எம்க்யூ9 ரீப்பர்' என்ற ட்ரோனின் மற்றொரு வகை தான், 'எம்க்யூ9பி' என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பராகுவேயில் காந்திஜி சிலை ஜெய்சங்கர் திறந்து வைத்தார்



அசன்சியன்,ஒக.22

பராகுவேயில் மகாத்மா காந்தியின் மார்பளவு சிலையை மந்திரி ஜெய்சங்கர் திறந்து வைத்தார். மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், தென் அமெரிக்காவிற்கு தனது முதல் அதிகாரப்பூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார். பராகுவேயில் மகாத்மா காந்தியின் மார்பளவு சிலையை அவர் திறந்து வைத்ததார். அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் ஆகஸ்ட் 22–27 வரை பிரேஸில், பராகுவே மற்றும் அர்ஜென்டினா ஆகிய நாடுகளுக்கு அதிகாரப்பூர்வ பயணமாக சென்று இருக்கிறார்.

பராகுவே தலைநகர் அசன்சியன் நகரின் முக்கிய நீர் முனையில் சிலையை அமைத்துள்ள அசன்சியன் நகராட்சியின் முடிவை அவர் பாராட்டினார். இந்தச் செயல் கொரோனா பெருந் தொற்றுநோய் காலத்தின் போது மிக வலுவாக வெளிப்படுத்தப்பட்ட ஒற்றுமையின் அறிக்கையாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் பராகுவேயில் புதிதாக திறக்கப்பட்டுள்ள இந்திய தூதரகத்தின் வளாகத்தையும் அவர் திறந்து வைக்கிறார். அங்கு சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு பராகுவேயின் சுதந்திர போராட்ட இயக்கம் தொடங்கிய வரலாற்று சிறப்புமிக்க காசா டி லா இன்டிபென்டென்சியா பகுதியையும் அவர் பார்வையிட்டார்.

## 2024இல் மோடிக்கு மாற்றாக மக்கள் கெஜ்ரிவாலையே பார்க்கின்றனராம்!

### டில்லி துணை முதல்வர் மணீஷ் கருத்து



2024 தேர்தலில் மோடிக்கு மாற்றாக மக்கள் அரவிந்த் கெஜ்ரிவாலை பார்க்கின்றனர் என டெல்லி துணை முதல்வர் மணீஷ் கருத்த. வெளியிட்டிருக்கின்றார்.

தலைநகர் டெல்லியில் அரவிந்த் கெஜ்ரிவால் தலைமையில் நடந்துவரும் ஆம் ஆத்மி ஆட்சியில் துணை முதலமைச்சரான மணீஷ் சிசோடியாவின் கீழாக கடந்த ஆண்டு மதுபான ஆயத்தீர்வை கொள்கை வகுக்கப்பட்டது. அந்தக் கொள்கை வகுப்பிலும் அதனை அமல் படுத்தியதிலும் முறைகேடுகள் நடந்ததாக முறைப்பாடு எழுந்தது. மதுபான உரிமங்கள் பெற்றவர்களுக்கு திட்டமிட்டு ஆதாயங்கள் அளிக்கப்பட்டன எனவும், டெல்லி ஆயத்தீர்வை சட்டம் மற்றும் விதி முறைகள் மீறப்பட்டன எனவும் சர்ச்சை எழுந்தது.

இந்த சட்ட விதிமீறல்கள் குறித்து டெல்லி தலைமை செயலாளர் அறிக்கை அளித்ததன் பேரில், சி.பி.ஐ. விசாரணை நடத்த கவர்னர் வி.கே.சக்சேனா உத்தரவிட்டார். அதையடுத்து, இந்த முறைகேடு தொடர்பாக சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது. இதனிடையே, இவ்வழக்கில் டெல்லி துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியாவின் வீடு, ஆயத்தீர்வை முன்னாள் ஆணையர் அரவா கோபிகிருஷ்ணா மற்றும் இரு அரசு அதிகாரிகளின் வீடுகள் உள்பட 31 இடங்களில் சி.பி.ஐ. அதிகாரிகள் கடந்தவாரத்தில் சோதனை நடத்தினர். இந்த சோதனையை தொடர்ந்து மணீஷ் சிசோடியா உள்ளிட்டோர் மீது சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்துள்ளது.

இந்தநிலையில், மணீஷ் சிசோடியா ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில், தேசிய அளவில் அரவிந்த் கெஜ்ரிவால் உயர் பதவிகளுக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் வந்துள்ளன.

2024 தேர்தலில் மோடிக்கு மாற்றாக மக்கள் அரவிந்த் கெஜ்ரிவாலை பார்க்கின்றனர். ஏனென்றால் கெஜ்ரிவால் சுகாதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்து பேசுகிறார். இதனால், பா.ஜ.க., டெல்லி ஆளுநர், டெல்லியின் தலைமைச் செயலாளர் ஆகிய தரப்பினர் கெஜ்ரிவாலின் வளர்ச்சியைத் தடுக்க வேண்டும் என்றஒற்றைநோக்கத்தோடுசெயல்படுகின்றனர். அவ்வாறு செய்யாவிட்டால் 2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. தோல்வியடைந்துவிடும் என்பது அவர்களது பயமாகும், என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## காஷ்மீரில் மெஹபூபா முப்தி திரும்பவும் வீட்டுக் காவலில்!

ஸ்ரீநகர்,ஒக.22

மக்கள் ஜனநாயக கட்சி தலைவர் மெஹபூபா முப்தி, தான் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என சமூக வலைதளத்தில் தகவல் தெரிவித்துள்ளார்.

ஜம்மு – காஷ்மீர் முன்னாள் முதல்வரும், மக்கள் ஜனநாயக கட்சித் தலைவருமான மெஹபூபா முப்தி சமூக வலைதளத்தில்து தொடர்பில் கூறியுள்ளவை வருமாறு :–

சமீபத்தில் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட காஷ்மீர் பண்டிட் சமூகத்தைச் சேர்ந்த சுனில் குமாரின் வீட்டுக்குச் சென்று, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறத் திட்டமிட்டிருந்தேன். இதைத் தடுப்பதற்காக என்னை வீட்டுக் காவலில் வைத்துள்ளனர்.

மத்தியஅரசின்தவறானகொள்கைகள் காரணமாக காஷ்மீர் பண்டிட்கள் உயிருக்கு தீவிரவாதிகளால் ஆபத்து ஏற்பட்டுள்ளது. – இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

மெஹபூபா, ஸ்ரீநகரில் உள்ள தன் வீட்டின் கேட் பூட்டப்பட்டிருப்பதையும், வீட்டின் முன் மத்திய துணை இராணுவப் படையினர் நிற்பதையும் புகைப்படம் எடுத்து, சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார்.











# பல்கலை மாணவர் ஒன்றியச் செயற்பாட்டாளர்களை விடுவிக்கக் கோரி திருமலையில் கண்டனப் பேரணி

## பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டாம் எனவும் வற்புறுத்து

(பைல் இஸ்மாயில், ஹஸ்பர்)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவ செயற்பாட்டாளர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க வேண்டாம் எனக் கோரி வட ,கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து கண்டனப் பேரணி ஒன்றை நேற்று திருகோணமலை 3 ஆம் கட்டை பிள்ளையார் கோயிலுக்கு முன் நடத்தியது .

இந்தப் பேரணி திருகோணமலை அலெக்ஸ் தோட்டத்தில் இருந்து ஆரம்பித்து சர்வதே நிலையத்துக்கு முன்னால் வந்தடைந்து முடிவுற்றது.

இப்பேரணியின்போது, 'பல்கலைக்கழகம் மாணவர்களை விடுதலை செய்!', 'அனைத்து போராட்டக்காரர்களையும் விடுதலை செய்!', 'பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு!', 'மனித உரிமையை அங்கீகரி!' என்ற வாசகங்களையுடைய பதாகைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தமையுடன் கோங்களையும் எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தின் போது போராட்டக் காரர்களினால் ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது .இம் மகஜரில் கூறப்பட்டவை வருமாறு:-

இலங்கையின் வடக்கு, கிழக்கைச் சார்ந்த மனித உரிமை பாதுகாவலர்கள், சிவில் அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் ஒன்றினைந்து, ஜனாதிபதியான தங்களிடம் 18 ஒகஸ்ட் 2022 அன்று கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மாணவர் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் சார்ந்த எமது பகிரங்கக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரம் ஆகியன அரசமைப்பின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளாகும். இந்த உரிமைகளை பல்கலைக்கழக மாணவர் செயற்பாட்டாளர்களும் சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்களும் தமது கோரிக்கைகளை தமது நாட்டின் சகல பிரஜைகளுக்கும் அரசாங்கத்துக்கும் வெளிப்படுத்துவதற்காக பயன்படுத்தினர்.

அவர்கள் வன்முறையில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. தொழிற் சங்க நடவடிக்கைகளும் வெகுஜன போராட்டங்களும் பயங்கரவாத நடவடிக்கைகள் அல்ல. மாணவ செயயற்பாட்டாளர்கள் பயங்கரவாதம் சம்பந்தப்பட்ட எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

எனவே பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க வேண்டாம் எனக் கோருகின்றோம்

இலங்கையில் ஜனாதிபதியே பாதுகாப்பு அமைச்சராவார். அவ்வகையில் எவரையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கும் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் தங்களுக்கே உண்டு.

எனவே தங்களின் அதிகாரத்தை பயன்படுத்தி மாணவ செயற்பாட்டாளர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைப்பதற்கான தடுப்பு காவல் கட்டளைப் பத்திரத்தில் கைச்சாத்திட வேண்டாம் எனக் கோருகின்றோம். இலங்கையில் வடகிழக்கு சார்ந்த சிறுபான்மை தமிழர்களான நாம் தற்போதும் கொடூரமான பயங்கரவாதத் தடை சட்டத்தின் மனிதத் தன்மையற்ற துன்புறுத்தலை இன்று வரை அனுபவித்து வருவதோடு அச் சட்டத்தின் காட்டுமிராண்டித்தனமான சுபாவத்தினைநேரடியாகஎதிர்கொண்டஅனுபவங்களும் எமக்கு உண்டு .

பதின்ம வயதில் கைது செய்யப்பட்ட அப்பாவி தமிழ் இளைஞர்கள் 30 தொடக்கம் 40 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை சிறையில் கழித்து வருகின்றனர். சிலர் வெளிச்சத்தை காணாது சிறைக்குள்ளேயே மாண்டு போயினர்.

இலங்கையின் சிறுபான்மை மக்களான எம்மை பொறுத்த வரையில் இந்த நாட்டில் யாரும் இனிமேல் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படக் கூடாது. அறவழிப்போராட்டக்காரர்கள் அனைவரையும் உடன் விடுவிக்குமாறு கோருகின்றோம்.- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கறவைப் பசு தாக்கியதில் வயோதிபர் ஒருவர் சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள திக்கோடை கிராமத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கறவைப் பசு தாக்கியதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுதாவளையைச் சேர்ந்த 69 வயதுடைய நாகமணி பாக்கியராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்று ஈன்று 15 நாள்களான பசுமாட்டில் நேற்று வழமை போன்று பால் கறந்து கொண்டிருக்கும் போது மாடு திடீரென நெஞ்சுப் பகுதியில் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

களுவாஞ்சிகுடி நீதிமன்ற பதில் நீதிவானின் உத்தரவிற்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டமையுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைககும் படி பொலிஸாருக்கு அறிவித்தார்.

# விபத்தில் காயமுற்றவர் 20நாள்களின் பின் சாவு

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கீச்சான்பள்ளம் ஒள்ளிக்குளம் வீதியில் கடந்த இருபது நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேயனோடை ஈரான் சிற்றி பிரதேசத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய ஏ.பி.அஹமட் அலி என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இருபது நாள்களுக்கு முன்னர் கீச்சான்பள்ளம் ஒள்ளிக்குளம் வீதியில் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது விழுந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு, அன்றிரவே நல்லடக்கம் செய்யப்பட்டது.







# மட்டக்களப்பு மாநகரசபையினால் சமூகத்தோட்டம் வேலைத்திட்டம்!

(க.கிருபாகரன்)

தற்சார்புப் பொருளாதாரத்தினை அதிகரிக்கும் பொருட்டு, சமூகத் தோட்டம் அமைக்கும் செயற்திட்டம் மட்டக்களப்பு மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி காலத்தில் பொதுமக்களை வீட்டுத் தோட்டம் செய்வதற்கு ஊக்கப்படுத்துவதன் மூலமாக உணவுப் பாவனையில் ஆரோக்கியத்தையும், தற்சார்புப் பொருளாதாரக் கட்டமைப்பையும் பேண முடியும்.

இந்த சமூகத் தோட்டத்தில் மட்டக்களப்பு நகரிலுள்ள புளியந்தீவு இளைஞர், யுவதிகள் தன்னார்வமாகப் பங்கெடுக்கின்றனர். இதன் மூலமாகத் தற்கால இளைஞர், யுவதிகள் மத்தியில் விவசாயம் பற்றிய அறிவினை ஏற்படுத்தவும், ஆர்வத்தினை உண்டு பண்ணவும் முடியும்.

இந்த இந்தச் சமூகத் தோட்டத்தில் முதல் கட்டமாக வல்லாரை மற்றும் பொன்னாங்கண்ணி ஆகியன நடப்பட்டுள்ளன. இந்தத் தோட்டத்திற்கான காணி மற்றும் நீர் வசதிகள் மட்டக்களப்பு மாநகரசபையால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல்களுடன் தமக்குள்ள தொடர்புகள் வெளிப்படும் என்பதாலேயே ஆட்சியாளர்கள் அக்கறையில்லை!

## பேராயர் கர்தினால் குற்றச்சாட்டு




உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆழமான விசாரணைகளை முன்னெடுத்தால் , அதனுடன் தமக்குள்ள தொடர்புகள் வெளிப்பட்டு விடும் என்ற அச்சத்தாலேயே அரசியல் தலைவர் அது தொடர்பில் விசாரணைகளில் கரிசணை கொள்ளாமலுள்ளனர்.

அதன் காரணமாகவே தாக்குதல்கள் இடம்பெற்று 40 மாதங்கள் கடந்துள்ள போதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி நிலைநாட்டப்படாமலுள்ளது என்று பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை குற்றஞ்சுமத்தினார்.

சுதந்திரத்துக்குப் பின்னரான 75 ஆண்டுகளாக நாம் பயணித்த பாதை தவறு என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டிய பேராயர் , அந்த தவறால் பெற்றுக் கொண்ட படிப்பினைகள் மூலம் இனி சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

றாகமை – தேவத்தை தேசிய பெசிலிகா தேவாலயத்தில் வருடாந்தம் இடம்பெறும் நோயாளர்களுக்கு ஆசி வேண்டி முன்னெடுக்கப்பட்ட விசேட ஆராதனையின் போதே பேராயர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பல தசாப்தங்களாக சுயநலமே நாட்டைஆட்சிசெய்துகொண்டிருக்கிறது. சொத்துக்கள் மீதான பேராசைக்கு அடிமையாகியுள்ளதால் கொள்கைகளைக் காட்டிக் கொடுக்கும் கலாசாரமே இன்று நடைமுறையிலுள்ளது. இதற்கு ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொண்டிருப்பது பொறுத்தமற்றது.

நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் சுயநலத்தின் காரணமாகவே நாடு இன்று இந்த நிலைமையை அடைந்துள்ளது. சமூகம் என்ற ரீதியில் நாமும் அதனை அங்கீகரித்திருக்கின்றோம். ஒவ்வொரு தேர்தல்களிலும் மீண்டும் மீண்டும் ஊழல் , மோசடிக்காரர்களுக்குவாக்களித்து அவர்களிடமே நாட்டை ஒப்படைத்துள்ளோம். எனவே இன்று ஏற்பட்டுள்ள இந்த நிலைமைக்கு நாம் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டியவர்களாவோம்.

எனவே நாம் எமது சிந்தனையை மாற்ற வேண்டும். முறைமை மாற்றம் என்பது எம்மிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். அதனை வெறும் வாய் வார்த்தைகளால் அன்றி , யதார்த்தத்தில் நடைமுறை சாத்தியமானதாக்க வேண்டும். சமூகம் மாற்றமடைய வேண்டியது அத்தியாவசியமானதாகும். 1956 இலிருந்து நாட்டில் இனவாதம் தூண்டப்பட்டது. சிங்களவர்கள் மாத்திரமே எனக் கூறினர். இதன் பலனாகவே மோசமான யுத்தத்தை எதிர்கொள்ள நேரிட்டது.

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் பின்னர் அபிவிருத்தியடைந்திருக்க வேண்டிய இலங்கை , யுத்தத்தால் இன்று ஏனைய நாடுகளிடம் கையேந்தும் நாடாகியுள்ளது. அன்று சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ , சிங்கப்பூரை இலங்கை போன்று மாற்ற வேண்டும் என்றார். ஆனால் இன்று இலங்கையின் நிலை என்ன? இந்நாட்டின் ஆட்சியாளர்களே இவ்வாறான நிலைமையை ஏற்படுத்தியுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 40 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. இந்தத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டோருக்கான நீதி எங்கே? 272 அப்பாவி மக்களின் உயிர்கள் வீசி எறியப்பட்டுள்ளன. இது தொடர்பில் தீர்க்கமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு எதற்காக ஆட்சியாளர்கள் தயங்குகின்றனர்? அவ்வாறெனில் இதில் ஏதோ ஓர் இரகசியம் இருக்கிறது என்றல்லவா அர்த்தம்?

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆழமான விசாரணைகளை முன்னெடுத்தால் , அதனுடன் தமக்குள்ள தொடர்புகள் வெளிப்பட்டு விடும் என்ற அச்சத்தினாலேயே விசாரணைகளில் கரிசணை கொள்ளாமலுள்ளனர். கடந்த 75 ஆண்டுகளாக நாம் பயணித்த பாதை தவறானது என்பதை அனைவரும்ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆட்சியாளர்களை மாற்றும் தைரியம் எமக்குக் காணப்படவில்லை. எனினும் அந்தமாற்றம்அத்தியாவசியமானதாகும்.

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக்குவதாகக் கூறினார்கள். தாமரைக் கோபுரம் என்ற ஒன்றை எதற்காக நிர்மாணித்தனர் எனத் தெரியவில்லை. சுபீட்சமான எதிர்காலம் எனக் கூறினர். மக்கள் ஒருவேளை உணவைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையை அடைந்துள்ளமையே இவர்களின் சுபீட்சமாகும். 75 ஆண்டுகளாக இழைத்த தவறினால் பெற்றுக் கொண்ட படிப்பினையின் மூலமேனும் நாம் இனி சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டும். – என்றார்.

# பொதுஜன பெரமுனவின் தேவைகளை தற்போது ரணில் நிறைவேற்றுகின்றார்!

## ஹிருணிகா சாடல்



மக்களால் முன்னெடுக்கப்பட்ட அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது வன்முறைகளில் ஈடுபட்ட சில குழுக்கள் செய்த நாசகார செயல்களை போராட்டகாரர்கள் மீது சுமத்துவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுனவின் தேவைகளைத் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து கூறுகையில் –

தற்போது பொதுஜன பெரமுனவின் தேவைகளையே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார். பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டதால் அவர்கள் கோபத்திலுள்ளனர்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர்கள் ஏதாவது ஒரு நெருக்கடிகளை உருவாக்கி, அவற்றை தமக்கேற்ற விதத்தில் பிரசாரம் செய்து அதனைக் கொண்டு அரசியல் இலாபமீட்டுகின்றனர். அதற்கமைய வீடுகள் தீவைக்கப்பட்டமை உள்ளிட்ட நாசகார செயல்களை மேற்கொண்ட அனைத்து குற்றங்களையும் அமைதியான போராட்டகாரர்கள் மீது திணிப்பதற்கு முயற்சிக்கிறார்கள். குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரின் கேள்விகளிலிருந்து அதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. வசந்த முதலிகே உள்ளிட்ட போராட்டங்களை மேற்கொண்ட இளைஞர்களின் வாழ்க்கையை சீரழிக்க வேண்டாம். தற்போதுள்ளவர்கள் சரியான தலைவர்கள் என்றால் இந்நேரத்தில் இளைஞர் யுவதிகளின் எழுச்சி தொடர்பில் மகிழ்ச்சி அடைய வேண்டும். மாறாகக் கோபமடையக் கூடாது. எவ்வாறிருப்பினும் போராட்டங்கள் இன்னும் முடியவில்லை. – என்றார்.

# கோழி இறைச்சிக்கும் கட்டுப்பாட்டு விலை!

கோழி இறைச்சிக்கான கட்டுப்பாட்டு விலையை விதிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ள நிலையில் இது தொடர்பான இறுதித் தீர்மானம் இந்த வாரத்தில் எட்டப்படவுள்ளது.

எவ்வாறாயினும், கோழிப் பண்ணையாளர்கள் விலையைக் குறைக்க ஒப்புக்கொண்டால், கட்டுப்பாட்டுவிலைஅவசியமில்லை என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களில் பல பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள அதே வேளை, பருப்பு, உருளைக் கிழங்கு, வெங்காயம், மிளகாய் உள்ளிட்ட பொருள்களின் விலையும் குறையும் என கூறியுள்ளார்.

# காரைதீவில் கிருஷ்ண ஜெயந்தி





கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு நேற்று முன் தினம், அம்பாறை மாவட்டம் காரைதீவு கொம்புச் சந்தியில் உறியடிக்கும் திருவிழா இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள் காரைதீவு நிருபர் சகா)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.08.2022இல் வெளியிடப்பெற்றது.